
# எரிச்சல்






சுத்தமாக்குவதாக
எண்ணி

சிறுதுளி–பிரபா

# எரிச்சல்

வாழ்த்துக்கள்.

அன்புடன்



சுத்தமாக்குவதாக
எண்ணி
அசுத்தமாகிறேன் !

சிறுதுளி~பிரபா

நூல் : எரிச்சல் (கவிதைத் தொகுப்பு)

ஆசிரியர் : பிரபா

பக்கங்கள்: 64

கணினி வடிவமைப்பு : பிரபா

அச்சுப்பதிப்பு : ஊவா பிரின்டர்ஸ்
பதுளை

வெளியீடு : சிறுதுளி பதிப்பகம்
ஸ்பிரிங்வெளி

விலை : 100.00

# சமர்ப்பணம்

என்னை
உலகுக்கு
அழைத்துவந்து
வாசிப்பு ஊட்டிய
என்
பெற்றோர்க்கு

# முன்னுரை

எல்லாக் கவிஞர்களையும் போல்தான் கவிதையில் புரட்சி செய்யப் புறப்பட்டு, அது முடியாது என்று தெரிந்தும் விடாப்பிடியாக எழுதிக்கொண்டிருக்கிறேன். என் கவிதைகள் பத்திரிகையில் வரத்தொடங்கியவுடனேயே என் தலைக்குப் பின்னால் ஒரு ஒளிவட்டம் தோன்றத்தொடங்கியது. என்னை யாரும் உற்றுநோக்கினால் ஒரு கவிஞரை பயபக்தியோடு பார்ப்பதாக எண்ணி ஏமாந்ததுண்டு. அந்த மாயையிலிருந்து விடுபட அதிக காலமெடுத்தது.

இதனிடையே, ஒரு தமிழ்ப்பாட ஆசிரியனாக மாணவர்களை வாசிக்கச்செய்வதும் படைக்க வைப்பதும் மிகுந்த சிரமாக இருக்கின்றது. வாசிப்பையும் படைப்பையும் ஜனரஞ்சகப்படுத்துவதன் மூலம் ஒரு உந்துதலை ஏற்படுத்தலாமென்பது என் எண்ணம். வாசிப்பு தருகின்ற போதையில் மூழ்கடித்து, படைப்பதன் திருப்தியை பெற்றுக்கொடுப்பது என் வியூகம்.

நிற்க..என் வளர்ச்சியை மீட்டுகிறேன்.

சங்கரலிங்கம் , சுசிலாதேவி ஆகிய என் தந்தையும் தாயும் சரியான வயதில் வாசிப்பை எனக்கு ஊட்டினார்கள். அது பெறுமதிவாய்ந்த சொத்து.

என் பால்ய வயது ஆசிரியை திருமதி ஜெயக்கொடி சேவை செய்வது எப்படியென்று எனக்கு காட்டினார். தொடர்ந்து ஆசிரியர் ஸ்கந்தராஜா, ஆசிரியைகள் பூங்குழலி, அன்பரசி போன்றோர் தங்கள் பங்களிப்வை சரிவர வழங்கினார்கள்.

எங்களுக்கு ஆனந்தவிகடன் ஓசி வழங்கிய கொக்காகல புஷ்பராஜ் அண்ணா முக்கியமானவர்.

ஆசிரியர் திரு புனிதராஜ் எனக்கு வாழ்க்கையை கற்றுக்கொடுத்தார். இன்னொருவர் வளர்ச்சிக்கு எவ்வாறு பங்களிக்கலாமென எடுத்துக்காட்டினார்.

அதிபரும், விஞஞான ஆசிரியருமான திரு இராமசாமி கண்டிப்பும் கனிவுங் கொண்டவர். அவரது சரியான வழிகாட்டலால்தான் சாதாரண தரத்தை தாண்டமுடிந்தது.

கணித ஆசிரியை திருமதி இராமசாமி, தமிழறிவூட்டிய ரவி சேர், அடிபோடும் ஏசு சேர், துரு துரு டீச்சர் இந்துராணி, அமைதியான ஆங்கில ஆசிரியர்களான, அருளானந்தன், நவரட்னராஜா செந்தமிழ் சொல்லும் ஆசிரியர்கள் திரு ஆசைத்தம்பி, ஆனந்தராஜா என பலரும் என் வளர்ச்சியில் பங்கொடுத்திருக்கிறார்கள்.

உயர்தர ஆசிரியர்களான திரு சக்திவேல், திரு திருச்செல்வம், திரு தேவேந்திரன் ஆகியோர் என்னுள் சரியான தரத்தை ஏற்படுத்தினார்கள். என் பள்ளித்தோழர்கள்: இவர்கள்தான் என் கவிதைக்கே காரணம். எனக்கு ஒளிவட்டம் தந்தவர்கள். ஆசிரிய சேவையை தெளிவாக விளக்கி நல்ல நிர்வாகத்தை என்னுள் பதித்தவர் அதிபர் திரு நாகராஜா. அவருக்கு என் நன்றிகள். தமிழாசிரியனாவதற்கு, தமிழாலடித்த போதனாசிரியர் திருமதி பாலச்சந்திரன், தமிழ் காட்டும் ஆசிரியர்களான திரு பாலகுமார், திருமதி சாந்திமோகன் ஆகியோர் நல்ல வழிகாட்டிகளாக இன்றும் திகழ்கின்றனர்.

என் இலக்கிய நண்பர்கள் பத்மா, மாக்ஸ் பிரபா, தினா, பாலமுருகன், அழகுராஜா, நித்தி போன்றோர் அடங்காப் பிடாரிகள். தேடல் தூண்டிகள். நான் சாரணனாவதற்கு மின்னல் வெளிச்சம் வழங்கிய திரு சுப்ரமணியம் புவன், திரு பாயிஸ் இவர்கள் என் வாழ்நாள் வழிகாட்டிகள். வரவேற்கிறேன்.

நிற்க : என் வளர்ச்சி வாசிப்போடும், வாசிப்போரோடும், வாசிப்போடு சம்பந்தப்பட்டோரோடும் இணைந்தே கிடந்திருக்கின்றது என்பதை உணர்கிறேன்.

இறுதியில் என் மாணவர்கள்: அன்பை பொழிந்துவிட்டு 'தேமே' யென்று நிற்பார்கள். இழுக்கிறபக்கம் கிழிந்துவிடுவார்கள். இந்த தொகுப்பு அவர்களுக்காகத்தான்.

மலையகத்தில் எல்லாபுரட்சிகளும்லயத்திலிருந்து தொடங்கவேண்டுமென்பது பலர் உணர மறுக்கின்ற உண்மை. எமது எதிர்காலம் அவர்களது கைகளிலல்லவா இருக்கிறது. எம் சமூக வளர்ச்சிக்கு தடையாயிராது, பங்களிப்பு செய்யும் விதமாக மாணவர்களை வார்ப்பது என் லட்சியம்.

இந்நூலின் வருகை, சந்தர்ப்பம், காரணம், வருவோர், போவோர் எல்லாம் நல்லதொரு ஆரம்பத்திற்கு வித்திடக்கூடுமென ஏங்குகிறேன்.

இனியென் கவிதைகளென்ன சொல்கின்றனவென விசாரித்தறியுங்கள். கவிதைகளுக்கு களம் தந்த தினமுரசு, ஜனனி, சங்கமம், சூடாமணி, யாத்ரா, கவிதைக்கலசம், இதய சங்கமம், சூரியன், சக்தி யாவற்றுக்கும் நன்றிகள்.

நேயமுடன்,
சிறுதுளி ~ பிரபா
(முகவரி இல்லை)
0785 374 319

கைதுசெய்வதற்கு
நாங்கள்
தோட்டாக்காரன்களல்ல
தோட்டக்காரன்கள்!

உழைப்பினால்
பலம்பெற்ற
பலசாலிகள்தான்
பயங்கரசாலிகளல்ல

பச்சை இலைகளுக்குப்
பக்கத்தில் படுத்துறங்கி
செடிகளுக்காகச்
செத்துப்போகும்
எங்களிடமா
'சயனைட்' இருக்கும்?

அழும் கூரையின் கீழ்
அமர்ந்துகொண்டு
அழிக்கும் திட்டங்களை
எப்படி
உருவாக்க முடியும்...?

கைதுசெய்வதற்கு
நாங்கள்
தோட்டாக்காரன்களல்ல
தோட்டக்காரன்கள்!

மேனிக்குள்
மச்சங்கள் கீறல்கள்
பயிற்சியால் வந்தவையல்ல
நிர்வாகம் படுத்திய
பாடுகளால் வந்தவை!

சுதந்திரதாகம்
எங்களுக்குமுண்டு
தேவையான
நேரத்தில் மட்டும்
திரண்டெழுவோம்!
இதற்காக நாங்கள்
தீவிரவாதிகளா?

எ
ச்
ச
ரி
க்
கை

புதை குழி
வெட்டத்தெரியும்தான்...!
'பங்கர்'
வெட்டத்தெரியுமென்று
வீணாக பயப்படாதீர்கள்!

தயவுசெய்து
கன்று வைக்கிறவர்களை
குண்டு வைக்கிறவர்களென்று
குற்றப்படுத்தாதீர்கள்!!!

தம்பிப்பாப்பா கேட்ட மகன்
தூங்கியபின் அழுகிறாள்
விதவைத் தாய் !

# தாமதம்

விதைகளனைத்தும்
விழுந்தடித்துக்கொண்டு
முளைத்துவிட்டன

இன்னும்
ஒரு விதை மட்டும்
பூமியுள் தூங்குகிறது

சூரியக் கிரணங்கள்
தினந்தோறும் காத்திருந்துவிட்டு
திரும்புகின்றன

ஏனைய கன்றுகள்
டயானாவின்
கல்லறையாய் நினைத்து
விதைத்த தடயத்தை
விறைக்கின்றன

அடித்தச்சென்று
அநாதையாகிவிட்டதோ
தெரியவில்லை

ஒருவேளை
மண்ணைச் சமாதியென நினைத்து
மரித்துவிட்டதா?

அதென்ன....?
விதைத்த தடயத்திலல்லாமல்
வேரிடத்தில்
வெடிப்பு..!

ஒரு நாற்று
குட்டிப் பாம்பைப்போல்
எட்டிப் பார்க்கிறது

முட்டையிலிருந்து வெளிப்பட்ட
சிறிய குஞ்சைப்போல
அது சிரிக்கிறது

"ஏன்
தாமதம்...?"

"நான் வரவேண்டிய வாசலில்
'டைனோசர்' போலொரு கல்
குறுக்கே நிற்கிறது.....
வேறு பாதையால்
சுரங்கம் வெட்டி மேலே வர
சுணங்கிவிட்டது!

முத்தங்கள் பெருகிவிட்டன
காரணம் மின்வெட்டு !

குடும்பஸ்தர் வந்தார்
அதிலிருப்பது
'குதூகல'மென்றார்

காவற்காரர் வந்தார்
அதிலிருப்பது
'கதகதப்பு' என்றார்

அரசியல்வாதி வந்தார்
'வாக்குகள்' ஒளிந்திருப்பதாக
வாதித்தார்

மனைவி வந்தார்
உள்ளே இருப்பது
'ஊறல்கள்' என்றார்

தம்பி எழுந்தார்
தள்ளிவிடும்
'தண்ணீ'ரென்றார்

காதலன் கலங்கினார்
'தோல்விக்கு
மருந்' தென்றார்

ஆசிரியர் வந்தார்
'தெம்பு தரும்'
வம்பு
எதற்கென்றார்

விலைமாது வந்தார்
'வெறியும்
நாற்றமு'மென்றார்

மீனவர் வந்தார்
'தைரியம்' என்றார்

சாரதி வந்தார்
'விழிப்பு' என்றார்

பயணி வந்தார்
'விபத்து' என்றார்

என்
ன
வா
ம?

பாட்டன் வந்தார்
'பாட்டு' என்றார

மூதாட்டி வந்தார்
முறையாகக் கேட்டும்
முறைத்தார்
"மூத்திரம்" என்றார்

கடைக்காரர் எழுந்தார்
போத்தலைத் தொட்டார்
"மதுபான"மென்றார்!

அதிஸ்ட லாபச்சீட்டு விற்போர்
ஜோசியம் சொல்வோர்
ரேகை பார்ப்போர்
உழைப்பை நம்பினர்..!

எ
ளி
து

குழந்தைகளை
செல்லமாய்
கிள்ளிவிட்டுப்போவது

சுவரொட்டியை
பேசிக்கொண்டே
கிழித்துவிடுவது

வெறுங்கையால்
'பேட்டிங்'
செய்து பார்ப்பது

மலங்கழிக்கும்போது
எச்சில்
துப்புவது

பெருமூச்சால்
மெழுகுவர்த்தி
அணைவது

ஒருவரை
சுடுவது
கடத்துவது
கைதுசெய்வது

யாவும்
எளிது...!

மூக்குத்தி

தங்கப் பல்....!

# பல்

தாயின் முலைகளை
காப்பாற்றத்தான்
பிறக்கும்போது
நான் இல்லை

கடைசிவரை
வெண்மையாயிருக்கும்
வெறியில்தான்
பால் குடித்து
வளர்கிறேன்

பேச்சை
அடக்கி வெளியிட
அணைக்கட்டாயிருந்தும்
பயனில்லை
அதிகம் பேசி ~ பலர்
அடிபட வைக்கிறார்கள்

நான் விழுவேன்
எழுவதற்காக
பேசாமல் வளர்வேன்
நா உதைத்தால்தான்
அங்கே. இங்கே பாய்வேன்

என்னைக்
காட்டிக் காட்டி
என் தோழர்களை
காட்டும்படி
கெஞ்சுவோருமுண்டு
என்னைக் காட்டாமல்
நா உதைப்பால்
மேலே போய்விட்ட
கிளைகளிரண்டில்
நீர் வரவழைப்போருமுண்டு

என் குடும்பத்தை
கெடுப்பதால்தானே
பலர் என்னை
பிடுங்கிவைத்துக்கொண்டு
பிழைக்கிறார்கள்?

●

இருக்கும்போது
என்னையெவரும்
மதிப்பதில்லை

போகும்போது
சிரிப்பதில்லை

போனபின்பு
மறப்பதில்லை

நீங்களாக என்னை
வெளியேற்றிவிட்டு
வெளியேறியபின் ஏன்
சிலை வைக்கிறீர்கள்?

ஓ.. நான்
வெள்ளைக்காரன்
என்பதாலா?

அழகான பெண்களிடம்
மணி கேட்பதற்காக
நான்
கடிகாரம் கட்டுவதில்லை

# வழி

ஊதி ஊதி அடுப்பை
உருப்படாமல் போனோம்
சாதி சாதி எனச்சொல்லி
சரிவராமல் போனோம்
நாதி இருந்தும் நிலம் எமக்கு
பாதி யுமில்லை

ஆதி ஆதி எனச்சொல்லி
அதிலேயே இருந்தோம்
மிதி மீதி எதவுமில்லை
சிலருக்கு மீசையுமில்லை
பீதி யுண்டாக எமைத்தீவிர
வாதி யென்கிறார்

நீதி நீதி எனக்கேட்டால்
நிலமும் கிடைக்காது
வீதி வீதி போ என
விரட்டப்படலாம்
சேதி இதுதான் புரட்சிக்கு
தேதி பாருங்கள்

# இயற்கை

குண்டுத்
தாக்குதல்
இடி

வெடிப்பின்
சிதறல்
மழை

வைத்தியசாலை
பயணம்
வெள்ளம்

கைதுகள்
நிவாரணம்

# அவசர அவசியம்

இலங்கையின்
மத்தியிலிருக்கும் ஒரு புள்ளி
கரையிலிருக்கும் ஒரு புள்ளியை
காதலிக்கின்றது?

குளிர்காற்று
சுடும்காற்று
இது நல்ல பொருத்தம்

என் கனவில் அவள்
குளிரின் பின்னணியில்,
அவள் கனவில் நான்
வெடியோசையின் பின்னணியில்

தேயிலையை
உயிரோடு அனுப்பவா?
கடல் நீரை
கரிப்போடு அனுப்புடி.....

நான் கூரையை வெறிப்பது
இரண்டு காரணங்களுக்காக
ஒன்று ஒழுகுதல்
மற்றது கடிதம் தாமதித்தல்

அவளும்
கூரையை வெறிக்கக்கூடும்
அது இருந்தால்

எங்களுக்குள் ஒற்றுமை
எதிலிருக்கிறது பார்த்தீர்களா?
அழுகையே
எங்கள் பகுதித் தொழில்
அவர்கள் அழுகிறார்கள்
கௌரவமாக
நாங்கள் அழுகிறோம்
கேவலமாக

சோதனைச் சாவடிகளை
தாண்டி
நானும் அவளும்
சோதனைகளை தாண்டி
நாங்களும் அவர்களும்
இணைய வேண்டும்.

தேர்தல் வரும்

# உறுதி

கோவில் மைதானம்
கோலாகல மைதானமாகும்

வசதியில் குளித்துவிட்டு
ஆடம்பரத்தில் அமர்ந்து வருவார்
தலைவர்

தலைவரின்
துண்டை ஆடவைக்கும்
காற்றைக்கூட
தண்டிக்க தயாராயிருப்பர்
தொண்டர்கள்

மேனியெங்கும்
தொண்டை முளைக்கும்
தலைவருக்கு

எதற்கும் தலையாட்டும்
மரங்கள்

கரங்கள் கூப்பப்படும்
தலைவராலும்
தலைவருக்காகவும்

சன நெரிசலை
பின்னால் தள்ளிவிட்டு
முன்னால் பயனப்படும்
வண்டி

வண்டிக்கு
முன்னால் பயணப்படும்
வாக்குறுதிகள்.....!

# மூன்றெழுத்து

அழுதது போதும்
எழுந்து வா

இனியும் தனிமையில் அமர்ந்து
சோகச்சொற்கள் தேடாதே

கண்ணீர் கசிந்தால்
தூசி விழுந்ததாய்
பொய்சொல்லும் பூவையர் மத்தியில்
நீ தைரியசாலிதான்

உனக்கு
கவிதையிலும் அழத்தெரியும்

காதல்...
தோல்வி...
சோகம்...
எல்லாம்
மூன்றெழுத்துச் சொற்கள்தான்

வேகம்...
வெற்றி...
சாதனை...
என்பனவும்
மூன்றெழுத்துச் சொற்கள்தான்.....!

மோதிரம்

உலோக மருதோன்றி

நி
லா
நி
லா
வ்ரா
வா

கவியெழுதும்போது இந்த
சிம்னி விளக்கு
கரைச்சல் கொடுக்கிறதே..

இந்த வெளிச்சம் ஒரு
வில்லன்தான்
அவள்
அருகில் இருக்கும்போது

கதாநாயக கனவோடு
உற்பத்தியாகுமென்
கவிதைப்பயிருக்கு
வெளிச்ச நீர் பாய்ச்சுவது
இதுவன்றோ

தன் குடியில்
மண்ணைப்போட்டுவிட்டு
தான் குடித்துவிட்ட
தந்தையைப் பார்த்து இது
தாகத்தோடு தள்ளாடுகிறது

சிம்னி சிறைக்குள் ஒரு
திரவத்தை எரிக்கிறேனென்ற
திமிரோடிருக்கும் சுடரை
கடத்திவிடும் நோக்கில் யாரோ
சிறையுடைப்பு நடத்தியதால் தானோ
சிம்னி மேனியில் சில வெடிப்புகள்...!

வெடிப்பிருந்தாலும் யார்
விழாமலிருக்கிறதென்ற போட்டியில்
முகம் பார்க்கும் கண்ணாடி
மூக்குடைபட்டு தோற்றுவிட்டது

அடியிலிருந்து வரும்
ஆதரவு குறைந்துவிடின்
இந்த வெளிச்ச ஆட்சி கவிழ்ந்துவிடும்
அப்போது

தம்பியின் நிலரப்பாட்டை
கண்கள் முனுமுனுக்கும்.....!

●

# சாதிக்காத சாவு

அன்புக்கினிய என் அண்ணன்
தற்கொலை செய்தான்
ஆவேச அழுகையும் ஆத்திரமும்
அள்ளித் தந்தான்
இரத்த நாளங்களை பூட்டிவைத்து
இதயத்தை வதைத்தான்
மதியை அழித்து துயரில்
மனதைத் தைத்தான்

கோழையின் தம்பியென பலரை
கொக்கரிக்க வைத்தாய் அண்ணா நீ
அவமானம் தாங்காது அன்னையை
அலறச் சொன்னாய்
தந்தையின் தன்மானத்தை
தவிடுபொடியாக்கி
தங்கையினி வீதிமிதிப்பதை
தடுத்து விட்டாய்

தம்பி உடையான் படைக்கஞ்
சானென்று சொல்வதுண்டு
தமிழனொரு கோழையெனத்தூற்ற
இதுவேயினி சான்று
வீரமரணம் அடைவதில் தானே
விவேகம் உண்டு
இந்த வெட்கக்கேட்டை கழுவி நாங்கள்
நீக்குவது என்று?

உன் கண் மூடலுக்கு அந்த
காதல்தான் காரணமா?
காதலை வாழவைத்ததாக
உனக்கென்ன கர்வமா?
நேசத்திற்காக உயிரை நாசம் செய்
வதுதான் நாகரிகமா?
சாதிக்காமல் சாவில் வீழ்ந்தாய் நீயெல்லாம்
மனித ஜென்மமா?

●

# இனம்

மாட்டிறைச்சி சுமந்துவரும்
மாட்டுவண்டி

வண்டிக்காரனை மட்டுமல்ல
வாடிக்கையாளரையும் ~ இது
வாழவைக்கும்

கூறுபோடப்பட்டிருப்பது ~ தம்
கூட்டமென்று தெரியாமல்
தாமும் ஓர்நாள்
கூறுபடுவோமென அறியாமல்

இழுத்துப்போவதில்தான்
எத்தனை ஆனந்தம் ...!
எத்தனை அவசரம் ...!

விசயம் விளங்கவில்லை
விளக்கினாலும்
புரிவதில்லை ...!

பேனை

நீரிழிவு நோயாளி

# இது இப்படித்தான் (கவிதைக் கதை)

அன்று
மூன்றாம் தவணைப் பரீட்சையின்
முதல்நாள்

கடந்த தவணை
கைநழுவிப் போயிருந்த
முதலாம் இடத்தை இம்முறை
கைப்பற்ற வேண்டும்

முதலாம் மாணவனுக்கு
சபை முன்னே அதிபர்
பரிசளிப்பார் நான்
பரவசப்படுவேன் தந்தையால்
பாராட்டப்படுவேன்

இப்படி
எத்தனை கனவுகள்
வெற்றியை பிடித்துவிட
விவேகமாய் படித்திருந்தேன்

எனக்காக அப்பா
சேமித்திருந்த
எழுது பேப்பர்களை
எடுத்துக் கொண்டு
பள்ளியை நோக்கி
பயணப்படுகிறேன்

என்னை
உயர்த்திவிட போகும்
'குட்டை' கதிரையில்
குனிந்து அமர்கிறேன்

மூளைக்குள்
கட்டுக்கட்டாய் பதில்கள்
காத்திருக்கின்றன
பேனையுடன்
இதர ஆயுதங்களை
தயார்படுத்துகிறேன்
கடந்த முறை
முதலாம் இடம்பெற்ற மூதேவி
மண்ணிக்கவும் ஸ்ரீதேவி
என்னைப் பார்த்து சிரிக்கிறாள்

வெற்றி எனக்கு கிடைத்ததும்
அந்த சிரிப்பெல்லாம்
வேரோடு சாய்ந்துவிடும்
மனசுக்குள்
மத்தாப்பு சுத்துகிறேன்

அவசரமாக
அதிபர் வருகிறார்
எங்கும் நிசப்தம்
அனைவரும்
காதுகளை கூறாக்கி
கவனிக்கிறோம்

"இறுதித் தவணை சோதனை
இன்றோடு ஆரம்பிக்கிறது
எழுதுதாள்கள்
இங்கே விற்கப்படும்
பாடசாலை
இலட்சினை இல்லாத
புள்ஸ்கெப்கள்
புறக்கணிக்கப்படும்"

எனக்குள் புயல்
புள்ஸ்கெப்களை
புரட்டிப் பார்க்கிறேன்
இலட்சினை இல்லாமல்
எல்லாம்
விதவைகளாய் இருந்தன

அதிபரின்
வருமானம் அதிகரிக்க
எல்லோரும்
அவசரப்படுகிறார்கள்
என்ன இது
இவர்கள் விற்பதும்
என்னிடம் இருப்பதும்
ஒரே விலைதானே?

'கூட்டாளிமார்களிடமும்
கொடுப்பதற்கு
பணமில்லையென்று
கூறப்பார்க்கிறேன்
அதற்குள்
எனது ப்ளஸ்கெப்கள்
குண்டு விழுந்ததுபோல
துண்டு துண்டாகின்றன

யாரோ
ஏளனமாய் சிரிக்கிறார்கள்

காசில்லை என்பதை
கவலையோடு சொல்கிறேன்

நாங்கள் சொல்வதைத்தான்
நீங்கள் செய்ய வேண்டும்
நாளை வா
இன்று போ

உணர்ந்தேன் ஊழலை

அப்பாவிடம் சொன்னேன்
உடனே விரைந்தார்
அதிபரை சொற்களால்
அரைந்தார்

அப்பாவின் வாயும்
அதிபரின் வாயும்
தொடர்ந்து
மல்லுக்கட்டிக் கொண்டிருக்க
நான் ஒரு ஓரமாய்
மன பாரமாய்

ஒரு புள்ளியினாலும்
முதலாமிடம் கைமாறக்கூடிய
உயர்போட்டி நிழவும்
என் வகுப்பில்
எனது முதல் நாள் பின்னடைவே
முழுமையான தோல்விக்கு
முதலுதவி செய்துவிடாதா?

கண்களில் வெளிப்பட்டது
கண்ணீரல்ல
கனல்
.........................................

இன்று.............

ஆசிரியர் தொழிலில்
ஆறு வருட பூர்த்தி

அதிபரின் ஆசியுடன்
விரைகிறேன்
பரீட்சை மண்டபத்திற்கு

அமைதி..
"புள்ஸ்கெப் வேணுங்கிறவங்க
எழும்புங்க"

"ஸ்கூல் சீல் வச்ச
புள்ஸ்கெப்லத்தான்
இனிமே எழுதணுமாம்
பிரின்சிப்பல் சொல்லிட்டார்

எந்த மாணவனும்
எதிர்க்கவில்லை........

அதிபரிடம் விரைகிறேன்
சில்லறைகளை ஒப்படைக்க..!

கரும்பலகை

கருப்பு வெளிச்சம்

என்னுடைய புன்ஸ்கெப்களில்
இலட்சினையை
பொருத்திவிட்டால் போகிறது

ஒரு வேளை
இலட்சினைக்குத்தான்
விலை கொடுத்துவிட்டார்களா?

வினா தொடுத்தேன்
விமலாவிடம்

"எனக்கா தெரியும்?"
என்றாள்

சட்டை பைகளை
சட்டை செய்கிறேன்
என்னைபோலவே
அவற்றிலும்
எதுவுமில்லை

மீண்டும்
அவசரமாக
அதிபரின் விஜயம்

விதவை புன்ஸ்கெப்கள்
வைத்திருப்போரை
வெறியோடு தேடுகிறார்

நான்
முன்கூட்டியே
எழுந்து கொள்கிறேன

"ஏன் ப்ன்ஸ்கெப் வாங்கல?"

"சல்லியில்லை சார்"

"என்ன........? சல்.........
அது எங்களுக்கு தெரியாது"

# பூச்சியம்

தடுக்கி விழுந்தேன்
பட்டை தீட்டப்பட்ட
அழகான இரண்டு
பூச்சியங்களால்

அவளே ஒரு
பூச்சியந்தான்

சில நேரங்களில்
பெறுமதியில்லை
பல நேரங்களிலும்
பெறுமதியே அவள்தான்

பகலில் ஒரு
பூச்சியம்
அது சுடும்

இரவில் ஒரு
பூச்சியம்
அது குளிரும்

நெற்றியில்
பூச்சியம்
அது
அடையாள அட்டையை
கூர்ந்து கவனிக்கவைக்கும்

அவலங்களுக்கு
முற்றுப்புள்ளி வைப்பதாக
சொல்வார்கள்
முற்றுப்புள்ளியை பெரிதாக்கி
பூச்சியமாக தந்துவிடுவார்கள்

கடிகாரம்

வற்றாத ஓடை

# எழுத்தில்

எழுதுவோம் புதிதாய்
எழுதுவோம்
இன்பம் அதில்தர
எண்ணுவோம்
சொற்களில் வித்தை தீட்டுவோம்
சுதந்திரமாய் பாடிக்
காட்டுவோம்

கொடுமையை சுட ஒரு
சுடுகவி
இளமையை சொல்ல
இன்னொருகவி
உரிமைகள் கேட்க
உறைக்கும்கவி
ஊழலைத் தூற்ற
ஒருநூறுகவி

கலர்களை இணைத்து
காதல்கவி
கண்ணீரை நிறுத்த
கனல்கவி
தாலாட்டைப் போற்றி
தாய்க்கொருக்கவி
தமழைப் போற்றி
தமழ்க்கொருகவி

அப்பாவை நினைத்து
அன்புக்கவி
அழிவைச் சொல்ல
அழும்கவி
ஏழ்மையை கொல்ல
ஏவுகணைக்கவி
இலங்கையை செப்ப
இழவுகவி

வேலை கேட்டு
வேறொருகவி
விளையாட்டாய் ஒரு
கடுகுக்கவி
விஞ்ஞானிக்கென்று
வசேடகவி!

## வா! இதை வாசித்துவிட்டு

காதலுக்குத்தான்
கண் காது அறிவு எதுவுமில்லை
உனக்குதான் எல்லாமுண்டே
என்னையேன் காதலிக்கிறாய்?

எனக்கு தெரியும்
காதல் விண்ணப்பங்கள்
தேடித்தரும் முகமல்ல இது
எனவேதான் உன் ஈடுபாடு
தூரத்து இசை நிகழ்ச்சியாய்
இனிக்கிறது

எனக்கு
'அக்கான்' மாதிரி இருக்கிறாய்
சகிப்பேன் பலர்
'அக்கா'என்றுதானே
ஆரம்பிக்கிறார்கள்

அந்திவானம்போல் நீ
அழகுதான்
இறுதியில் எனக்குள்
இருட்டன்றோ நிலவுகிறது

பருவக்கோளாறு தரும்
கனவில் வந்து கட்டிப்பிடிக்கவோ
என்னை பைத்தியமாக்கவோ
குறைந்தது
வயிற்றுக்கும் தொண்டைக்கும்
உருவமில்லா
உருண்டையை உருட்டவோ
உன்னால் இயலவில்லை
மன்னிப்பேன்

'பொருத்தம்'என்பது
காதலுக்கு இல்லைதான்
காதலர்களுக்கு அது
கட்டாயம் வேண்டும்

எல்லோரும் காலிக்கிறார்கள்
என்பதால்
நாமும் காதலிக்கலாம்

ஆனால்
எல்லோரும் தோற்கிறார்கள்
என்பதால்
நாமும்
தோற்போம்

## எல்லாம் நடக்கிறது

வீட்டுக்கு
வெளிச்சம் கேட்டோம்
வெளியேயும் வெளிச்சம்
வீடு எரிவதால்

அப்பாவிகளை
அழிக்கவேண்டாமென்றோம்
அழிக்கவில்லை
வல்லுறவிற்குட்படுத்தாமல்

புதைகுழிகளை
தோண்டச் சொன்னோம்
தோண்டுகிறார்கள்
எங்களையும் புதைக்க

அகதி முகாம் தேடுகிறோம்
வதை முகாம் வைக்கிறது
தமிழ் பேசும் இராணுவம்

கைது செய்ய வேண்டாமென்றோம்
குற்றவாளிகளைக்
கைது செய்யவில்லை

•

# படப்பிடிப்பு

சிறுவயதில்
அழுதேனாம்
எனக்கு
நினைவில்லை

நல்ல தம்பி
மாமாவீடம்
ஒன்று இருந்தது
ஆனால் அவர்
அடிக்கடி
வருவதில்லை
வந்தாலும்
மறுத்துவிடுவேன்

பருவ நீராட்டு
வழாவன்று
பிடித்தார்கள்
வியர்வையுடன்
சிரித்தேன்

இரண்டாவது
கடிதத்தில் அவன்
சேர்ந்து
எடுத்துக்கொள்ள
அழைத்தபோது
ஆத்திரப்பட்டேன்

இங்குவந்த பிறகு
அது
எதிர்பாராமல்
நடந்தது
நடக்கும்

நான்
மறுக்கவில்லை
வெட்கப்படவில்லை
அழவில்லை
ஆத்தரப்படவில்லை
என்பதால் அல்ல
அவர்கள் இஷ்டம்
என்பதால்

நடு இரவு வேளையில்
குழம்பிய கூந்தலுடன்
தூங்கி வழிந்த
விழிகளுடன் வைத்து
விசாரித்துவிட்டு
இலக்கமென்று தந்து
இரவு உடையில்
என்னை
படையினர்
படம்பிடித்து கொண்டு
போனார்கள்

பறவைகள் எச்சமிட்டன
குஞ்சுகளின் தலைகளில்

# நவீன மரபு

புதுக்கவிதையெழுதி
புதுமை செய்யப் புறப்பட்டோரே
மரபை மறந் ததை
மறுதலித் தெறிந்திட்டோரே

அனைவரும் வாருங்கள் ~ ஒரு
அறிக்கை தருகிறேன் பாருங்கள்

பழைய பாடல் பக்கம்
படுக்காதோரை தட்டியெழுப்பி
புதிய டியூன் பொருத்தி அதே
பழைய வரிகளை கொட்டிப் பரப்பி
விந்தை செய்வதுண்டு ~ பலர் அதை
விழுந்து விழுந்து ரசிப்பதுண்டு

ஒரு நீட்ட வரி ~ அதற்கடுத்ததொரு
குட்டைவரி
அகராதியிலில்லா சொற்களாய்
அடுக்கிவிட்டால் எல்லாம்சரி
என்றிருந்தால் பயப்படுவான்
படிப்பவன் மோட்டுவாளையைத்தான்
வெறித்திடுவான்

மரபன்னைக்கு பட்டைக்குறைத்து
மறக்காமலொரு எளியசேலை கொடுத்து
நகைகளைக் குறைத்து
மென்மையாய் நடக்கவைத்து
அழைத்துவந்தாலினி
அப்பாக்கள் கிடைப்பார்
கிழடுகள் சிலவேளை
சைட் அடிப்பார்

# தேர்தல் முடிவு

மனிதனோடு
'யுத்தம்'
'சமாதானம்'
என்பன
தேர்தலில் குதித்தன

ஐந்து
எழுத்துக்களை பெற்று
சமாதானம்'
முன்னணி வகித்தது

நான்கு
எழுத்துக்களை பெற்று
யுத்தம்
மனிதனோடு
சமநிலையில் நின்றது

அறுதிப்
பெரும்பான்மையின்றி
ஆட்சியமைப்பதில்
இழுபறி

மனிதனை யுத்தம்
அவசரமாக
விலைக்கு வாங்கியது

இறுதியில்
எட்டு எழுத்துக்களுடன்
யுத்தம் மனிதன்
கூட்டணி
காலவரையற்ற
ஆட்சியமைக்க
குண்டு'மணி
ஷெல்'வராஜா
புதிய
ஜனாதிபதியானார்

# அடிமைகளா?

தேயிலைச் செடிகளின்
இடுப்பை ஒடித்த
குட்டையாக்கினால்தான்
இலை பெற முடிகிறது
எங்கள்
இடுப்பை ஒடிப்பதால்தான்
பலருக்கு பலன் பெற முடிகிறது

மலைகளிலும் ~ மேடு
பள்ளங்களிலும்
திட்டமிட்டு
பசுமையைத் தெளித்துவைத்தான்
இறைவன்
எங்கள் வாழ்க்கையிலல்ல...

இருந்தாலும்
நாங்கள் வாழ்கிறோம்
படிக்கிறோம்
பட்டம் பெறுகிறோம்
எழுதுகிறோம்
இயற்றுகிறோம்
கிண்ணங்கள் வெல்ல பந்தை
சுழற்றுகிறோம்

வசதியின்மையை
வெற்றிகொள்வதெப்படியென்று
தெரிந்துகொண்டோம்

ஒருநாள் வரும்
'ஒலிம்பிக்ஸ்' சிலும்
எங்கள் கால்கள் ஓடும்
திருநாள் வரும்...!

சினிமா உலகு

அழகான குப்பை

# தோல்வி

இங்கே
மலிவாய் கிடைப்பது
இரண்டு
ஒன்று காதல்
மற்றது தோல்வி

சிலர்
தேறியதற்கும்
பலர்
தேறாமற்போனதற்கும்
எழுதுகோல்தான்
பின்னணி வகிக்கிறது

காதலை
ஆரம்பிப்பதொன்றும்
கஷ்டமில்லை என்பதால்
தோல்வி பலருக்கு
தொந்தரவில்லை

இப்போதெல்லாம்
கட்டாயமாக
கண்டிக்கவேண்டியது
எதையெனில்

கவிஞர்களாவதற்காக
காதலில் தோற்றோம்
என்று
கத்துவதை

பூசு மஞ்சள்
முத்தம்பெறும் மூலிகை

இடை
ஒடிந்துபோவது போல்
இருக்கும்

தாவணி
வெட்கப்படும்

சடைகள்
நாட்டியமாடும்

பாவாடை
பாதங்களை
தேடவைக்கும்

என்னோடு
மட்டும்
கண்கள்
பேசும்

இதழ்கள்
ஏதோ
சொல்லப்பார்க்கும்

அதற்குள்
கனவு
கலைந்து பேசும்

தாலி

மஞ்சள் விலங்கு

# தா
# வ
# ணி

## அழகை அனலாகலாம்

கொழும்பில்
குண்டு வெடித்தால்

ஹட்டன் நகரம்
நடுங்கும்

நுவரெலியா
நொந்து போகும்

பதுளை
பயப்படும்

எம் இளைஞர்களுக்கு
வேலை கிடைக்கும
கம்பியென்னும் வேலை

நாக பாம்பு தீண்டியதற்கு
சாரைப்பாம்புகளை தண்டிப்பது
என்ன
சாமர்த்தியம்

எதுவாயிருந்தாலும்
பாம்பு பாம்புதானேயென்று
காரணம் சொல்வதை
கண்டிக்கிறோம்

உள்ளே எங்கள் தோழர்களுக்கு
மிளகாய்ப்புகை
மிதக்கவிடும் பொழுது
வெளியே
துளிர்விட்டுக்கொண்டிருக்கிறது
'தீ'

பிறகு
மண்புழுவுக்கும்
விஷப்பல் முளைக்கும்

தூங்கியெழுந்த தீ
ஒருநாளும் சுடாது.....
பொசுக்கும்...!!!!

# களத்திலிருந்து

என் நினைவுக்கருவை
சுமந்து திரியும்
கனிமொழிக்கு
கனிவுடன் எழுதுகிறேன்

நீ நலமாயிருந்தால்
நான் பலமாயிருப்பேன்
நாம் காதலித்த கதையை
காற்றுக்கு சொல்லிவருகிறேன்
எம் காதல்
பூப்பெய்திய நிமிடத்தை
புரட்டிப் பார்க்கிறேன்

சிரித்து மகிழ்ந்ததை
சிந்தித்துப் பார்க்கிறேன்

களத்துக்கு நான் புறப்பட்டபோது
உன் விழிகளிருந்து கண்ணீர்
விழப்பார்த்ததும்
என் திருப்த்திக்காக அது
உள்ளே பாய்ந்து உன்
இதழ்களை நடுங்கவைத்தபோது
இருக்கிப்பிடித்து
இறுதி முத்தம் கொடுத்ததை
எண்ணிப்பார்க்கிறேன்

உன் லட்சணத்தையும்
என் லட்சியத்தையும்
இணைத்து
புதியதொரு கனவை
உருவாக்கிக் கொண்டிருந்தபோது
வந்தது உத்தரவு

உன்னைப் பார்க்க
அலைய வேண்டிய கண்கள்
உயிரைக்காக்க
அலைகின்றன

கவலைப்படுவதற்கில்லை

எம் காதலை மட்டுமல்ல
இன்னும்
எத்தனையோ காதல்களை
எதிர்காலம் காதலிக்கும்
சுதந்திரமாய்.....!

# எருமை

சிகரட் புகைக்க மாட்டேன் ~ அது
சிறு துண்டென்றாலும்
பீடியை கையால் பிடிக்கவே மாட்டேன்

சாராயத்தை சமாதியாக்குவேன் ~ அது
சாகும் தருணமென்றாலும்
கள்ளு குடிப்பதை கண்டிப்பேன்

வெற்றிலை தின்பதை வெறுப்பேன் ~ எனக்கு
வேண்டியவன் தந்தாலும்
சுருட்டை உடனே சுருக்கிலிடுவேன்

பியர் அருந்தவே பிரியப்படுவேன் ~ யாரும்
அடித்துத்தடுத்தாலும்
அந்தஸ்துள்ள சகதியில்தான் அதிகம் படுப்பேன்

## சே

## வை

தபாலகம் போகும்போதெல்லாம்
எத்தனைபேருக்கு
பேனை
ஓசி வழங்கியிருப்பேன்

குண்டு சர்ச்சை காலத்திலும்
எத்தனைபேருக்கு
பைகளை வைத்திருந்து
உதவியிருக்கிறேன்..!

படமாறிகை இருட்டிலும்
முகம்சுழிக்காமல்
எத்தனை தடவை
சிகரட் நெருப்பு
கடன் கொடுத்திருக்கின்றேன்..!

மாவட்டம் பார்க்காமல் பலமுறை
மலசலகூட அழுக்கை
சிறுநீரால் கழுவியிருக்கிறேன்..!

நான் ஏன்
அரசியலில் இறங்கக்கூடாது?

---

வாயில் பீடி
கையில் சுருட்டு
நெஞ்சில் நெருப்பு
புகை விடும்போது
உயிரும் போய்விட்டது..!

# த லை க் க ன ம்

மேலலைந்தால் மேகம்
கீழ்வந்தால் மழை

மேலிருந்தால் மாடி
கீழிருந்தால் தரை

மரத்திலிருந்தால் கிளை
கீழ்விழுந்தால் விறகு

கூரையிலிருந்தால் ஓட்டை
தரையிலிருந்தால் பொந்து

தலைப்பு தலையிலிருந்தால்
கவிதை
முடிவிலிருந்தால் ஹைக்கூ

தலைக்கனம் தலையிலிருந்தால்
ஹிட்லர்
காலிலிருந்தால் தெரேசா

நிழல்

வெளிச்ச
சுற்றிவளைப்பில்
கெரில்லா

# நரை விழந்த நம்பிக்கை

திங்கள் என்றெனத் தெரியாது ~ அந்த
'பங்கரில்' கலண்டர் கிடையாது

செவ்வாயில் துதிபாட மடியாது ~ அந்த
'ஷெல்' வாய்க்கு பக்தியெல்லாம் புரியாது

புதனன்றும் வந்த கிலி போகாது ~ அந்த
புலிப்பட்டம் எவனைவிட்டும் ஓடாது

வியாழன் வந்து வெடிக்காக ஏங்காது ~ அந்த
மயானம் ஒரு பொழுதேனும் தூங்காது

வெள்ளியன்றா சாந்திவரப்போகுது ~ கரம்
கொள்ளியேந்தி மரத்துத்தான் போகுது

சனிக்கிழமையும் சாவு இல்லாமல் ஏது ~ இது
சண்டையால் நாம் பெற்ற பேறு

ஞாயிறு இருந்தும் இல்லையே ஓய்வு ~ முகாமில்
போயிருக்கிறோம் இல்லை துன்பத்தேய்வு

வீடிழந்து வாடுதிந்த வாழ்வு ~ எமைத்
தேடியணைக்கும் வந்தால் நல்ல தீர்வு

பென்சில்

வளரா நிலா

# கவனியுங்கள்

கற்களாலும் முட்களாலும்
காயப்பட்டு காயப்பட்டு
மரத்துப்போன உங்கள் கால்கள்

பெருவிரலின்
கோடிக் கிள்ளல்களை
கீறல்களாய் தாங்கியுள்ள
உங்கள் சுட்டு விரல்கள்

வியர்வையின் விளைநிலமான
உங்கள் பொன்மேனிகள்

என் தாயின் தாய்முதல்
தங்கையின் தோழிவரை

கவனியுங்கள்

பனியோடு பயணப்பட்டு
நீங்கள் பறித்துப்போடுவது
இலைகளை மட்டுமா

அறிவு சிந்தனை யாவுமே
இலைகளோடு
தலைக்குப் பின்னால்

உங்களால் பலர்
வெற்றி பெறுகிறார்கள்
விமோசனம் அடைகிறார்கள்
நீங்கள் இன்றுவரை
வெற்றிலைதான் போடுகிறீர்கள்

'ஓவர்' கிலோ கொழுந்தெடுத்தும்
உங்களுக்கும் சேர்த்து
இன்றுவரை ஒன்றுமில்லை
உயர்வு வந்ததாக சான்றுமில்லை

மந்தைகளை..
மேய்ப்பவன் அறிவான்
அறுப்பவன் அறிவான்
மந்தைகள் அறியுமா?

நீங்கள் அழகிகள் என்றால்
சிரிப்பீர்கள்
அடிமைகள் என்றாலும்
சிரிப்பீர்கள்

நாமே நாட்டின்
நல்ல அடிமைகளென்று
நாமே அறியும்வரை
நமக்கு விமோசனமில்லை...

இடி

வானவில்லை பார்த்துக் கொண்டே
நடந்ததால்
மேகங்கள
மோதிக்கொண்டன..!

# பா
# ர்
# வை

ஊமையான விழிகள்
உறங்க மறுக்கும்போது
உன்னைப்பார்க்கிறேன்

நீ
முகில்களோடு ஓடி விளையாடும்
அழகை ரசிக்க நானென்றும்
அவ்வளவு புண்ணியம்
செய்தவனல்ல

நீ
அழித்துக்கொண்டிருக்கும் இருட்டை
என் விழிகளில் வைத்துவிட்டான்
இறைவன்

ஒருவித வெண்மையை உணர்கிறேன்
உண்மையில் எனக்கு
ஒன்றும் தெரிவதில்லை

செவிகள் செய்யும்
சேவையினால்தான்
சீவியம் செய்கிறேன்

செய்திகள் சொல்லும்
எண்ணிக்கைப்படி பார்த்தால்
இன்னுங்கொஞ்ச நாளில்
எவருமேயிங்கு
இருக்கமாட்டார்களென்று
எண்ணத்தோன்றுகிறது

அதிர்வு...
அழுகுரல்...
மரண ஓலம்...
ரத்த வாடை...
பார்வையற்றவனென்ற
பரிதவிப்பை
தணிக்கின்றன

உலக அநியாயங்களை
காணக்கிடைக்காத
உன்னத வரம் பெற்ற திருப்தியில்
திரும்பிப்படுக்கின்றேன்

உறக்கம்
குருடனென்று என்னை
குறை சொல்லாதே...!

# வாழவைப்போம் வா

சின்னச் சின்ன சிக்கல்களுக்கு
சிக்கெடுப்போம்
பென்னம்பெரிய பிரச்சனைகளை
பிய்த்தெறிவோம்
அன்பழிய செய்தவற்றை இருவருமாய்
அழித்தொழிப்போம்
ஆகையால் திரும்பி நீ வந்துவிடு
இணைந்திருப்போம்

மனைவியென்று வந்த பிறகு
மறுதலித்தோடுவதா?
துணைவியென ஆனபிறகு
தூர விலகுவதா?
புரிந்துணர்வு இன்றேல் வாழ்வு
பூமியிலுண்டா இதை
அறிந்திருந்தும் இன்னுமுனக்கு
ஆத்திரமா?

செல்வங்கள் எமக்கிரண்டு
நீதான் தாய் நாம்
செதுக்கி வைப்பதுதான் அவர் வாழ்வு
சிந்திப் பாய்
வாரிசுகளை வளப்படுத்த மட்டுமேனும்
வரு வாய் அவர்
வாழ்வு சிதறாதிருக்க இன்றே நீ
விரை வாய்

# எத்தனையோ தலைவர்கள் (கவிதைக் கதை)

படிப்பதாய் புரட்டி புரட்டி
நடித்ததால்
பாடப்புத்தகங்களுக்கு
பல் வலித்தது

புண்ணியமூர்த்தி சேர்
புவியியல்’பாடமெடுக்காமல்
புகைப் பிடிக்க
போய் விட்டதால்
அவருக்கு
புண்ணியங் கிடைக்கும்

அவசரக் கூட்டமொன்றை
கூட்டினோம்
விவாதித்தோம்

விளையாடுவது
வகுப்பிலா? நாங்கள்
‘மைத்துனி’ எனக்கருதும்
மைதானத்திலா?

ஐயோ வேண்டாம்
அடுத்த மாதம் ‘டெஸ்ட்’
‘அப்சட்’ஆக்கினான்
அரிச்சந்திரன்

எங்கள் பார்வையில்
அவனுக்கு ‘கிறுக்கு’

தூதுக்குழு
அடிமேல் அடி அடித்து
மன்னிக்கவும்
அடிமேல் அடி வைத்து
அதிபரிடம்
அனுமதி பெற்றது

வெயில்தான் வெளியில்
எல்லா பாடங்களிலும்
‘பெயில்’ ஆகிறவர்க்கு
வெயில் ஒரு
பொருட்டல்ல

பந்தை நம்பி
பந்தயங் கட்டினோம்
ஐம்பது ரூபாய்

பூவா?தலையா?வில்
தலை விழுந்தது
அவர்கள் மட்டையெடுத்தார்கள்
முதல் பந்திலே
'விக்கட்டின்'தலையறுந்தது

ஆட்டம் தொடர்ந்தது
ஓட்டம் உயர்ந்தது
கொண்டாட்டம் பிறந்தது

பந்து பாப்பா
விக்கட் வில்லனிடன்
முத்தம் பெறாதிருப்பதில்
முனைப்பாயிருந்து
பத்து 'ஓவர்' களில்
நூற்றி ஆறடித்து அசந்தார்கள்

இனி
எங்கள் வேளை

இந்தப் பந்து என் இனம்போல
என்னமாய் மாறி மாறி
அடிவாங்குகிறதென்று...?
துக்கத்தில் ஆழ்ந்தேன்

களத்துக்கு
போனவர்களெல்லாம்
வேலை தேடி போனவர்கள்
போல
திரும்பி வந்தார்கள்
வெறுமையாய்

நானும்
மட்டையை எடுத்து
'மைக் டைசன்' போல பந்தை
குத்தோ குத்தென்று
குத்த நினைத்து
குப்புற விழுந்து
'ஸ்டம்ப்' ஆனேன்

படிப்பில்
புத்திஜீவிகளாய் இருப்போரும்
'போலட்' ஆனதால்
இது இறுதி 'விக்கட்'

களத்தில் கவலையோடு
காலந்தள்ளிக் கொண்டிருந்தான்
மாதவன்

மறு முனையில்
உரிய நேரத்தில்
உதவிக் கொண்டிருந்தான்
உலகநாதன்
அப்போதவன் எங்களுக்கெல்லாம்
உலகளாவிய நாதன்

மாதவன்
சிந்தனை முழுவதையும்
மட்டையில் இறக்கி
இயங்கினான்

மைதானத்தின் இருமருங்கிலும்
ரசிகர்களை போல்
படர்ந்திருந்த செடிகளுக்குள்
பந்தை செலுத்தினால்
இரண்டு ஓட்டங்கள்
இலவசம்

'மட்டை'
மண்டையால் இட்ட செயலை
'பந்து'
பாய்ந்து பாய்ந்து
நிறைவேற்றியது

இரண்டிரண்டாக
எண்ணிக்கை ஏறுகிறது

'பசி:
தேசமாயிருந்தாலும் எங்களுக்கு
'குஷி'

உயிரற்ற உடல்களுக்காக
ஒப்பாரி வைப்பதும்
சில்லறைகாரர்களுக்கு
'செல்ட்' அடிப்பதும்
'பெஜரோ' வந்தால்
'பெனர்' ஒட்டுவதும்
சமுதாயத்தின் முக்கிய
சம்பிரதாயங்கள் அல்லவா?

இதில் நாங்கள்
மட்டைக்கும் பந்துக்கும்
கை தட்டுவதால் என்ன
கவலை இருக்கிறது

எந்தவகையில் எறிந்தாலும்
மாதவனின் மட்டை
பிறவியெடுத்த பயனை
அடைந்து கொண்டிருந்தது

இது
இறுதி பந்து வீச்சு
வெற்றி பெற வேண்டியது
இரண்டு ஓட்டங்கள்
மாதவன் பெற்றிருப்பது
நாற்பத்து நான்கு எனும்
நல்ல 'ஸ்கோர்'

ஆனந்தமாக அறிவித்தோம்

செடிகளை பந்து கடக்கும்
இரண்டை
இலவசமாக படைக்கும்
எங்களுக்கே
வெற்றி கிடைக்கும்

பந்தய பணத்தில்
பாண் கடைக்கும்
பணம் கிடைக்கும்
என்றுதான் எண்ணி யிருந்தோம்

எவரும்
எதிர்பார்க்காத வண்ணம்
முன்னால் பாய்ந்து
மூர்க்கமாய் அடித்தான்

உயர்ந்து வந்த பந்தை
எதிரணியில் ஒருவன்
இலகுவாய் பிடிந்தான்

'கிரிக்கெட்டில்' புதிர் நடப்பது
சர்வதேச
போட்டிகளில் மட்டுமல்ல
சந்து பொந்துகளிலும் அது
சாத்தியமாகும்

மாதவனை
அடிக்காத குறையாக
அனைவரும்
அன்'பாய்? பார்த்தனர்

நான் அவனை
தனியாய் அழைத்தேன்
கடைசி நேரத்தில் ஏனடா
காரியத்தை கெடுத்தாய்?
என்றேன்

"மச்சான்
இன்னும் ஆறு அடித்து
என்'ஸ்கோரை'
அரைச்சதமாக்க
ஆசையாயிருந்தேன்
அநியாயம்
'அவுட்'டாயிட்டேன்" என்றான்

கவலைப்பட்டான்
பின்னர் சுதகரித்துகொண்டு
போனால் போகுதடா
எத்தனையோ தலைவர்கள்
இப்படித்தாண்டா
நடந்துக்கிறாங்கிறாங்க

தத்துவம் சொல்லி
தப்பித்தான்..!

## மிதி

மண்ணை மிதித்தோம்
சோறு கிடைத்தது

விண்ணை மிதித்தோம்
உலகம் சுருங்கியது

நிலவை மிதித்தோம்
விஞ்ஞானம் விரிந்தது

காதலை மிதித்தோம்
தோல்வி கிடைத்தது

மனிதர்களை மிதித்தோம்
யுத்தம் தொடங்கியது

ச

ரி

விளக்கையும்
அடுப்பையும்
ஊதுவோம்
விடிந்துவிட்டது

இறங்குவோம்
எடுப்போம்
சோதனைச் சாவடி

பிடுங்குவோம்
கொடுப்போம்
காதலர் தினம்

நன்றாக
அருந்துவோம்
நாளை தேர்தல்

'ஆடு' வோம்
'மே' தினம்

கதவை
மூடிவோம்
கட்டிலடியில்
பதுங்குவோம்
சுதந்திர தினம்...!

இம்முறை
எங்கள்
வீட்டில்தான்
இயேசு
பிறப்பாராம்

ஒப்பிட்டுப்
பார்த்ததில்
தொழுவம்
தோற்றுவிட்டதாம்...!

ல

ய

ன்

# இயல்பு

புலி
உறுமும்
நாய் கடிக்கும்

காக்கை
பிணந் தின்னும்
குரங்கு பேன் தின்னும்

நரி விரும்புவது
எலும்புத்துண்டு
சுறா வுக்கோ
மனித வெறியுண்டு

எறும்புக்கு
கண்ணில்லை
பாம்புக்கு
காதில்லை

ஏதோ
இன்னொரு
பிராணிக்கு
இதயமேயில்லை

இப்படி
எல்லா
அங்கிகளுக்கும்
ஒவ்வோர்
இயல்புண்டாம்
ஆனாலும்

மேற்சொன்ன
எல்லா
இயல்புகளுமே
கொண்ட
இன்னொரு
பிராணியிருக்கிறதாம்

அதன் பெயர்
மனிதன்..!

வி
ர
க்
'தீ

ஒரு இளைஞனை பலர்
தூக்கிக்கொண்டு போகிறார்கள்
அவன்
வாயிலிருந்து எதையோ
கக்கிக்கொண்டு இருக்கிறான்

அவர்கள் அந்த தபால்காரரை
கடந்து செல்கிறார்கள் அவர் கையில்
'அரச பணி' கடிதங்கள் உள்ளன

வேலியுடைபட்ட ஒரு
விவசாயக்காணி
நடுவில் ஒருவர் குப்புறக் கிடக்கிறார்
அவரது கையில் சிறிய போத்தல்
சுற்றிலுமுள்ள பயிர்கள்
நாசம் செய்யப்பட்டுள்ளன

குளித்துகொண்டிருந்தவர்கள் எதையோ
இழுத்துக்கொண்டு வருகிறார்கள்
அது ஒரு பிணம்
பிணத்தின் 'சேர்ட்'பையில்
ஒரு புகைப்படம்
புகைப்படத்தில் ஒரு யுவதி

மண்ணெண்ணெய் நாற்றம் வீசுகிறது
பிணமொன்றை துணியால்
போர்த்தியிருக்கிறார்கள்
தண்ணீர் இறைந்து கிடக்கிறது
பொசுங்கிய சேலைத் துண்டுகளை
சிலர் காட்டுகிறார்கள்
வயதான தாயொருவரை
இளைஞரொருவர் திட்டுகிறார்

மாளிகை போன்றதொறு வீடு
நடிக நடிகையர் குழுமியிருக்கிறார்கள்
பெண் சடலமொன்று கிடத்தப்பட்டுள்ளது
சட்லத்தின்
தலைக்கு நேராக மேலே
தூக்குக்கயிறு தொங்குகிறது

ரயில் பாதையருகே
வெள்ளைக்காரர்களும்
குழுமியிருக்கிறார்கள்
அங்கே
சேதங்களுடன் ஒருவர்
செத்துக் கிடக்கிறார்
'அம்புலன்சும்' 'பொலிசும்' வருகிறது
இலங்கை தூதரத்திற்கு
சம்பவம் அறிவிக்கப்படுகிறது

ஒரு சிறிய வீடு
பல பெண் சடலங்கள்
சிதறிக்கிடக்கின்றன
அவற்றின் உடைகள்
அலங்கோலப்படுத்தப்பட்டுள்ளன
சடலங்களில்
துப்பாக்கிச் சூட்டு காயங்கள்
தென்படுகின்றன
வாசல் மணலில்
'பூட்ஸ்' காலடிகள் உள்ளன

நேற்று
பட்டுச்சோலையில்
பானுமதி

இன்று
ரூ பீசில்
நக்மா

நாளை
இலைகுலையில்
இளசுகள்

க
வ
ர்
ச்
சி

கொடியேற்றம் தொடங்கி
இன்றுவரை இந்த
இரண்டு மரங்களே
எங்கள் ஊரில்
முக்கியமானவை

குரங்குகளோ
மக்களைவிட
முக்கியமானவை

ஒரு காலத்தில் பெரிதாயும்
ஒரு காலத்தில் சிறிதாயும்
இரண்டு மரங்களும்
மாறி மாறி
மாறியிருக்கின்றன

குரங்குகளோ எப்போதும்
கொழுத்தே திரிகின்றன

குரங்குகள்
அப்பாவி மக்களிடம் வந்து
மரங்களில் எது
சிறந்த மரமென்று
விளக்கம் கொடுப்பதுண்டு

எதை ஆதரிக்க வேண்டுமென்று
கட்டளையிடுவதுமுண்டு

அப்பாவி மக்களுக்கு
நல்ல கனியும்
நல்ல நிழலும் கொடுக்குமாறு
ஏறியிருக்கும் மரத்திற்கு
குரங்குகள் கட்டளையிடும்

மரம் மக்களுக்கு
வெயிலும் முள்ளும்
வழங்கும்போது
குரங்குகள் குறட்டைவிடும்

வசந்த காலத்தில்தான்
நல்ல கூத்து

மரங்கள்
குரங்குகள்
மக்கள்

குரங்குகள்
இந்த மரத்திலிருந்து
அந்த மரத்திற்கும்
அந்த மரத்திலிருந்து
இந்த மரத்திற்கும்
தாவி விளையாடும்

இந்த மரத்தில் இருந்துகொண்டு
அந்த மரத்தையும்
அந்த மரத்திலிருந்துகொண்டு
இந்த மரத்தையும்
காரித் துப்பும்

மரத்திலிருந்து இறங்கி வந்து
அப்பாவி மக்களிடம்
செல்லங் கொஞ்சும்

மரங்களிருப்பதே
எங்களால்தானென்று
மார்தட்டும்

காலம் கொஞ்சம் மாறிவிட்டது

அதிக இலைகள்
வாங்கித் தராத
குரங்குகளை மக்கள்
குரங்கு பொம்மை செய்து
எரிப்பார்கள்

அப்போதும்
அவ்வப்போதும்
புதிய குரங்குகள்
தலைத்தூக்குகின்றன

அந்த குரங்குகளை
பயங்கரவாத குரங்குகளென்று
பழைய குரங்குகள்
காட்டிக்கொடுக்கின்றன

எந்தக்குரங்குகளையும்
வேண்டாமென்று
பேசாமல் இருப்போர் மேல்

எல்லா குரங்குகளும்
சிறுநீர் கழிப்பதுண்டு

எந்த குரங்கையாவது
நம்பியிருக்க வேண்டுமென்பது
அப்பாவி மக்களுக்கு இடப்பட்ட
சாபம்.......!

# செம்மணி விவகாரம்

படையினரிடம்
அனுமதி பெறும்படி
அரசு அனுமதிக்கும்

நீதிவானிடம்
அனுமதி பெறும்படி
படையினர் அனுமதிப்பர்

செம்மணி மண்ணிடம்
சம்மதம் பெறும்படி
மண்வெட்டிகள் அனுமதிக்கும்

அதற்குள்
செம்மணியையே
புதைத்துவிடுவார்கள்

புதைக்காததை தோண்டும்போது
எதிர்பார்ப்பு உண்டாகும்
புதைத்ததை தோண்டினால்
சலிப்புதான் ஏற்படுமென்று
சங்கடப்படுகிறார்கள்

இதுவரை வெட்டிய
கிணறுகளிலிருந்து
பூதங்களே கிளம்பின

நிஜமாகவே
பூதங்கள் கிளம்புமென்று
தெரிந்துவிட்டது
இவர்கள்
செம்மதியை தோண்ட
சம்மதிப்பார்களா?

அ
ழ
கு

பூமி
சீறி
எச்சரித்தது

தண்ணீரை கொண்டு
தண்டித்தது

காற்றை ஏவி
கரிஜித்தது

மனிதத் தொல்லையை
பூமியால்
தாங்க இயலவில்லை

கோபங் கொண்டு
தன்
சுற்றுப் பாதையிலிருந்து
விலகியது

குலுங்கியது

தொலைதூர
கிரகமொன்றில்
மனிதர்களை மட்டும்
கொட்டியது

பிரபஞ்சத்தின்
அழகிய கிரகமாக
பூமி மாறியது.....!!

ஆளுயர உழைப்பு
தலைப்பாகையளவு அறுவடை
வியர்வைத்துளியளவு மீதி...!

# வெற்றி தோல்வி

தினமும் மாலையில்
இந்த கணக்குப்பிள்ளை
பேனை வாளை ஏந்திக்கொண்டு
புத்தகங்களோடு
போர்செய்ய ஆரம்பிப்பார்

வேலை
வேகமாக நடைபெறும்

கூட்டி
மொத்தத்தைக் காண்பார்
பிழைவிட்ட இடத்தை சுரண்ட
'பிளேட்' தேடுவார்

அழுத்துக் கொள்வார்

"ப்ச்" என்பார்

சில இடங்களை
வெட்டிக் கொத்துவார்

தலை சொறிவார்

உடனே ஒரு கொசு அடிப்பார்

இறுதியில் வெற்றிபெறுவார்
கணக்கை முடித்து
கொட்டாவி விடுவார்

............

மாதச் சம்பளம் வரும்

மூத்த பிள்ளை
முந்நூறு கேட்கும்
"ப்ச்" என்பார்

கடைசிப்பிள்ளை
கைச்செலவுக்கு ஒரு
கணக்கு கேட்கும்
வீட்டு செலவுகளுக்கு மனைவி
விளக்கம் சொல்வாள்

குடைவேண்டுமென்று கடைசிப்பிள்ளை
குறுக்கே நிற்கும்

அங்குமிங்கும் நடப்பார்
கணக்கிடம் பரிதாபமாக
தோற்று நிற்பார்...

# குறள் வெண்பாக்கள்

இனவாத தீயில் தமிழ்பேசும் மக்கள்
தினமெரியா ரொன்று படின்

•

மூக்குத்தி விற்றும் பசிதீர்த்த தாய்மூச்சை
காக்கும் வழியில்லை காண்

•

புல்லடி போட்டாய்நீ போடுவாய் நீயறியாய்
செல்லடியில் செத்தபின் பும்

•

ஆடைகள் கீழிறக் கப்பட் டதாலேபலர்
காடையர் ஆயினர் காண்

•

எல்லா மிழந்நோர்நாம் எச்சரிக்கி றோம்கவனம்
கொல்லுங் கொடுந்தீ வித

மாணவரிடையே மரபுக் கவிதையறிவை மேம்படுத்துவதற்காக குறள் வெண்பா ஒன்று கூறுபோடப்பட்டு விளக்கப்படுகிறது.

குறள் வெண்பா

விழுத்திய மாமரங்கள் சாப மியற்ற
கழுத்துகள்நீ ரின்றிச்சா யும்

அலகிடுதல்

| | | | |
|---|---|---|---|
| விழுத் திய<br>நிரை நிரை<br>கருவிளம் | மா மரங் கள்<br>நேர் நிரை நேர்<br>கூவிளங்காய் | சா ப<br>நேர் நேர்<br>தேமா | மியற் ற<br>நிரை நேர்<br>புளிமா |

| | | |
|---|---|---|
| கழுத் துகள் நீ<br>நிரை நிரை நேர்<br>கருவிளங்காய் | ரின் றிச் சா<br>நேர் நேர் நேர்<br>தேமாங்காய் | யும்<br>நேர்<br>நாள் |

தளை கூறுதல்

| | | |
|---|---|---|
| விழுத்திய மா<br>மாமரங்கள் சா<br>சாப மியற்<br>மியற்ற கழுத்<br>கழுத்துகள்நீ ரின்<br>ரின்றிச்சா யும் | விளமுன் நேர்<br>காய்முன் நேர்<br>மாமுன் நிரை<br>மாமுன் நிரை<br>காய்முன் நேர்<br>காய்முன் நேர் | இயற்சீர்வெண்டளை<br>வெண்சீர்வெண்டளை<br>இயற்சீர்வெண்டளை<br>இயற்சீர்வெண்டளை<br>வெண்சீர்வெண்டளை<br>வெண்சீர்வெண்டளை |

விழுத்திய
⇩
கழுத்துகள
⇩
அடிஎதுகை



சாரணர் நாம்
சகோதரராய் கூடுவோம்
மலைகளிலே
மகிழ்ச்சியாக ஏறுவோம்
மலையகத்தை
மாற்றவே எண்ணுவோம்
அறிவைப் பற்றி
அடைவோம் வெற்றி...!

சிறுதுளி பதிப்பக வெளியீடு